# அமர் சேவா சங்கம், ஆய்க்குடி

## தலைவர் அறிக்கை

# 2018-2019

பேரன்புடையீர்.

நமஸ்காரம். வாழ்க வளமுடன், வாழ்க வையகம்.

1993 ஜூலை 24 அன்று, அமர் சேவா சங்கத்திற்கு வருகை தந்து, சுவாமி சிவானந்தா பிளாக்-ஐ திறந்து வைத்து, சங்கம் தனித்துவத்தோடு செயல்பட தீர்க்க தரிசனத்துடன் ஆசி வழங்கிய நமது முதல் Patron-in-Chief பாரத ரத்னா Dr.C.சுப்ரமணியம் அவர்கள், 1993ம் ஆண்டு செப்டம்பர் மாத Bhavan's Journal இதழில் "Human Wonder" என சங்கத்தைப் பாராட்டியதைப் போற்றி நினைவு கூர்வோமாக.

நமது Patron-in-Chief Dr.M.S.சுவாமிநாதன் அவர்கள் மற்றும் நமது Patron திரு.N.வாகுல் அவர்களை செயலர் S.சங்கரராமனும் அடியேனும் அவ்வப்போது சந்தித்து நமது செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி குறித்து தெரிவித்து வருகிறோம். நமது Patron-ஆக மிகவும் ஆர்வத்துடன் செயல்பட்டு அறிவுரைகள் வழங்கி வந்ததோடு, நன்கொடையும் அளித்து ஆசிர்வதித்து வந்த திரு.S.V.மோனி அவர்கள் 24-01-2019 அன்று இறைவனடி சேர்ந்தது அவர்களது குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் நமக்கும் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக்கொள்வோமாக.

30/5/2018 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்று கொண்ட திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் IAS அவர்களை அடியேனும், S.சங்கரராமனும் நேரில் சந்தித்து சங்கச் செயல்பாடுகளை விளக்கி, சங்கத்தின் அறிவுரைக்குழுவின் Ex-Officio Chair Person என்ற முறையில் அறிவுரைக்குழு கூட்டத்தைத் தலைமையேற்று நடத்திதரவும், சங்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிடவும் அழைப்புவிடுத்தோம். ஜூலை 2018, 7ஆம் தேதி கூட்டத்தை நடத்த அனுமதிகொடுத்தமைக்கு சங்கத்தின் குழந்தைகள், இளைஞர்கள், யுவதிகள், பணிபுரியும் சகோதர, சகோதரிகள் மற்றும் நமது சேவையை பயன்படுத்திக்கொள்வோர், செயற்குழு, பொதுக்குழு மற்றும் அறிவுரைக்குழு உறுப்பினர்கள் சார்பில் மனமார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கின்றோம். பல்வேறு அவசர பணிகளுக்கு இடையே அன்றைய தினம் இரண்டு மணி நேரம் செலவிட்டு சங்கத்தை சுற்றிப் பார்த்து அறிவுரைக்குழுக் கூட்டத்திற்கு தலைமையேற்று நிதானமாக நமது செயல்பாடுகளையும், சேவைகளையும் கேட்டறிந்து கொண்டார். பிஸியோதெரபி Occupational Theraphy, நர்சிங் போன்ற பயிற்சிகளை வழங்கிட கல்லூரி ஆரம்பிக்க சங்க நிர்வாகிகளும் மறுவாழ்வுத்துறையில் பணிபுரியும் அன்பர்களும் திட்டமிட்டுள்ளனர் எனவும், அதற்கு 25 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது எனவும் மாவட்ட ஆட்சியரிடம் தெரிவிக்கப்பட்டது.

2019 செப்டம்பர் / அக்டோபர் மாதத்தில் நமது வளாகத்திலும் அதைத் தொடர்ந்து சென்னையிலும் நமது அறிவுரைக்குழு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

19.08.2019 அன்று குற்றாலம் ஸ்ரீபாராசக்தி மகளிர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற தென்காசியைத் தலைமையமாக கொண்டு அமைக்கப்படவுள்ள புதுமாவட்டம் தொடர்பான கருத்துக்கேட்புக் கூட்டத்தில் நாமும் நமது மக்கள் தொடர்பாளர் V. கல்யாணமும் கலந்துகொண்டு புதுகட்டடங்கள் கட்டும் போது மாற்றுதிறனாளிகள் பயன்படுத்தும் வண்ணம் சகல வசதிகளுடன் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவித்தோம். இது தொடர்பாக தேவையான ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்ள அமர் சேவா சங்கம் தயராகவுள்ளது என்பதையும் தெரிவித்தோம். கூட்டத்திற்கு தலைமையேற்ற திரு.மு.சத்தியகோபால், IAS. Commissioner for Revenue

Administration, மற்றும் தென்காசி தனிமாவட்ட உருவாக்கத்திற்கான சிறப்பு அதிகாரி திரு.G.K.அருண் சுந்தர் தயாளன் IAS அவர்களை நமக்கு மாவட்ட ஆட்சியர் அறிமுகம் செய்து வைத்தார். அவர்களையும் சங்கத்திற்கு வருமாறு கேட்டுக்கொண்டோம்.

வருடந்தோறும் நடைபெறும் நம்மிடம் பயிற்சி பெற்ற மாற்றுத் திறனாளர் இளைஞர் யுவதிகளுக்கான ஒன்று கூடும் விழா 2019-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15, 16, 17 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டார்கள். உபகரணங்கள் பழுது பார்த்து கொடுக்கப்பட்டன. கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. சிறப்பு விருந்தினராக திருமதி.சுலோச்சனா கிருஷ்ணமூர்த்தி, President, HCI, கனடா, மதுரை பரத நாட்டிய மாஸ்டர் திரு.& திருமதி.மாலா ராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சங்கமம் சிறப்பு பள்ளியின் 22-வது ஆண்டு விழா 02-02-2019 அன்று நடைபெற்றது. கனடா திரு.மோகன். Occupational Therapist, தென்காசி திரு.முருகன், பிரதம மந்திரி மகளிர் மேம்பாட்டு திட்ட நிறுவனர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். டாக்டர்.தினேஷ் கிருஷ்ணா. Director, HCI. Canada மற்றும் திரு.கல்யாணசுந்தரம், Sub inspector of Police, Special Division, திருநெல்வேலி, திரு.ஷாஜகான் கபீர், மாவட்ட கல்வி அதிகாரி, தென்காசி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். திருமதி.சுலோச்சனா கிருஷ்ணமூர்த்தி, President, HCI, கனடா தலைமையேற்று வாழ்த்துரை வழங்கி தனது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார். ஆசிரியப் பெருமக்களையும், பெற்றோரையும் பெரிதும் பாராட்டினார்.

நமது சிவசரஸ்வதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் மாணாக்கர்கள் வருடந்தோறும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுவருவது ஆசிரியப் பெருமக்களின் கடும்உழைப்பையும், மாணவச் செல்வங்களின் விடாமுயற்சியினையும் எடுத்துக்காட்டுகிறது. மாணவர்களுக்கு கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கையாக சாரணர் இயக்கம், இசைக்குழு, யோகா வகுப்பு, திருக்குறள் வகுப்பு, சிறப்பு வகுப்புகள் மற்றும் கலைநிழச்சிகான பயிற்சி போன்றவற்றிற்கு தனி கவனம் செலுத்தப்பட்டு மாணவர்களின் திறமைகளை ஊக்கப்படுத்தி வருவது பாராட்டுக்குரியதாகும்.

திரு.K.ஆறுமுகச்சாமி ஆசிரியர் அவர்களுக்கு ‘Best Scout Master’ என்ற விருதும் திரு.எஸ்.அருள்ஸ்டாலின் ஆசிரியர் அவர்களுக்கு சுற்றுசூழல் பராமரிப்பில் ‘சிறந்த ஒருங்கிணைப்பாளர்’ என்ற விருதும் திரு.S.சுப்பரமணியன் அவர்களுக்கு மாற்றுதிறனாளிகளில் ‘சிறந்த கணினி ஆசிரியர்” என்ற விருதும் திருநெல்வேலி, தமிழ்நாடு அறிவியல் கழகம் 05-01-2019 அன்று வழங்கி கௌரவித்தது.

தென்காசி கல்வி மாவட்ட சாரண சாரணிய இயக்கம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் கழக இயக்கம் இணைந்து திரு.K.ஆறுமுகச்சாமி ஆசிரியர் அவர்கள் சிறந்த Scout Master, களப்பணியாளர், மாணவரின் கனவு ஆசிரியர், அறிவியல் இயக்க ஆர்வலர் ஆகிய நான்கு பிரிவுகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2019 அக்டோபர் மாதத்தில் நடைபெறவுள்ள சுரண்டை, புத்தக திருவிழாவில் கௌரவிக்கப்படவுள்ளார்.

நமது வளாகத்தில் வைத்து தென்காசி திருவள்ளுவர் கழகமும் அமர் சேவா சங்கமும் இணைந்து நடத்தும் திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டி 21-4-2019 அன்று நடைபெற்றது. ஆய்க்குடி திருவள்ளுவர் கழக அன்பர்களும் நமது பள்ளியின் ஆசிரியர்களும் இந்நிகழ்வினை உள்ளன்போடு நடத்திக் கொடுத்தார்கள்.

திரு.P.N..ஷாஜகான்கபீர், மாவட்டக்கல்வி அலுவலர் அவர்கள், திரு.P.ஆனந்தவேலு, வட்டாரக்கல்வி அலுவலர் அவர்கள், செங்கோட்டை, திருமதி. டே.சா. மேரி கிரேஸ் ஜெபராணி, வட்டாரக்கல்வி அலுவலர் அவர்கள், செங்கோட்டை, திருமதி.S.சுலோச்சனா கிருஷ்ணமூர்த்தி, தலைவர் HCI போன்றோர் முன்னிலையில் 14-2-2019 அன்று சிவசரஸ்வதி வித்யாலயா பள்ளியின் ஆண்டு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

2019-ஆம் ஆண்டு ஜனவரி 30-முதல் பிப்ரவரி 4-ஆம் தேதி வரை சென்னை வேளச்சேரி ஜெயின் கல்லூரியில் நடைபெற்ற Hindu Spirtual Fare-ல் நமது Stall-ம் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. வருடந்தோறும் நடைபெறும் இந்நிகழ்வில் நாமும் தொடர்ந்து பங்கு கொள்கிறோம்.

10-5-2019 அன்று நமது சங்கப் பணியாளர்களின் ஒன்றுகூடும் விழா சீரும் சிறப்புமாக நடைந்தேறியது. பணிபுரியும் அன்பர்களின் குடும்பத்தாரும் இந்நிகழ்விலே பங்கேற்று சிறப்பித்தார்கள். பல போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன. தலைமை விருந்தினராக சென்னை திரு.லால்குடி G.J.R.கிருஷ்ணன், கர்நாடக வயலின் கலைஞர், மதுரை திரு.P.அன்பழகன். AGM, பேங்க் ஆ∴ப் இந்தியா, தென்காசி திருமதி.G.சுபலெட்சுமி, Sr.Manager, பஞ்சாப் நேஷனல் பேங்க் மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் பலரும் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

Spinal Cord Injured Persons Get-together வழக்கம்போல் இந்தாண்டு ஆகஸ்ட் 3, 4, 5 தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. மருத்துவ முகாம் கலைநிகழ்ச்சிகள் விளையாட்டுப்போட்டிகள் என பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியின் தொடக்கநாளன்று குற்றாலத்தில் காவல்துறை பாதுகாப்புடன் பேரணியும், நடன நிகழ்ச்சியும் நடைபெற்றன. திரு.தேபேந்திரநாத் சாரங்கி, IAS அவர்கள் இப்பேரணியை துவக்கி வைத்தனர். விழாவில் சிறப்பு விருந்தினராக திரு.பிரவீன்குமார் அபிநபு IPS Deputy Inspector General of Police, Tirunelveli Range கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார். பல்வேறு துறையைச் சார்ந்த சிறப்பு மருத்துவ நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு 04.08.19 அன்று மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், டாக்டர்.என்.எஸ்.ராஜா, திருச்சி, டாக்டர்.முருகையா, மகாலெட்சுமி மருத்துவமனை, சுரண்டை, டாக்டர்.அறம், மதுரை, டாக்டர்.செந்தில்பாபு, திருநெல்வேலி, டாக்டர்.கணேசன், தென்காசி, டாக்டர் கார்த்திக் துரைசாமி, திருநெல்வேலி. டாக்டர் கனியரசு, மதுரை, டாக்டர். சிபு, மதுரை, டாக்டர். இந்துமதி,தென்காசி, டாக்டர்.வேதமூர்த்தி, தென்காசி, டாக்டர், மகேஷ் சாம்பசிவன், திருவனந்தபுரம், டாக்டர் சுபகணேஷ், திருநெல்வேலி, டாக்டர், மது, தென்காசி ஆகியோர் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு தேவையான பல்வேறு விதமான சிகிச்சைகளுக்கான ஆலோசனைகள் மற்றும் இலவச மருந்துகளும் இந்த முகாமில் வழங்கப்பட்டது.

தண்டுவடம் பாதிக்கப்பட்ட பயனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறுவிதமான விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. தண்டுவடம் பாதிக்கப்பட்ட பயனாளிகளை வீட்டில் எப்படி பராமரித்துக்கொள்வது மற்றும் தொழிற்பயிற்சி நடத்துவது சம்பந்தமான மருத்துவ ஆலோசனைகளை அவர்களின் குடும்பத்தினர்களுக்கு மருத்துவர்கள் வழங்கினார்கள். நிறைவு நாளன்று. Mr.சகாய இளங்கோ, BWD Engineer, தென்காசி, திரு.CA.V.மகாதேவன், சம்ருதி டிரஸ்ட், அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். Mr.V.சுவாமிநாதன், செயலாளர், Sundaram BNP Paripas, Home Finance Limited, Chennai ஆகியோர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள்.

Schools, Home, Sangamam, குழந்தைகள், DYTs, சங்கப் பணியாளர்கள், நலம்விரும்பிகள் பங்கேற்ற காந்திஜெயந்தி விழாவையொட்டி வருடந்தோறும் நடைபெறும் அகண்டநாமம் நிகழ்ச்சி 1-10-2018 அன்று காலை தொடங்கி மறுநாள் காலை வரை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து திரு.ராஜகோபால் பாகவதர் கடையநல்லூர் அவர்கள் உபன்யாசம் நடத்தினார்கள்.

பெங்களுர் கணினி நிபுநர் திரு.எஸ்.ரமேஷ் அவரது நெருங்கிய சகாவான திரு.K.கோவிந்த பிரகாஷ்பட் கணபாடிகள் மற்றும் மூவருடனும் சுமார் 20 பெங்களுர் வேதபாட சாலை சிறார்களுடன் 11-12-2018 அன்று வருகைதந்து நமது அமர் விநாயகர் கோவிலில் ருத்ர ஏகாதேசி வைபவத்தை சிறப்பாக நடத்தித் தந்து சிறப்பித்தார்கள். அவ்வமயம் திருசெந்தூர் திரு.முத்துசாமி அவர்கள் 12 அன்பர்களுடனும் செங்கோட்டை / கடையநல்லூர் வேதபாட சாலை ஆசான்கள் தங்களது மாணாக்கர்களையும் அழைத்து வந்து பங்கேற்கச் செய்தார்கள். எல்லாம் அவன் செயல்.

வழக்கம்போல் இந்தாண்டும் நமது வளாகத்தில் சென்னை வாராஹி வாரவழிபாட்டு மன்றமும் அமர் சேவா சங்கமும் இணைந்து மூன்று நாட்களுக்கு நடத்தும் சதசண்டி யாகம் ஜுலை 26, 27, 28 ஆகிய தேதிகளில் நடந்தேறியது. ஸ்ரீவாராஹி மைந்தன் சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். அமர் விநாயகருக்கு 108 சங்குகளில் ஜெபம் செய்யப்பட்ட புனிதநீர் அபிஷேகம் நடைபெற்றது. 24 வேத சாஸ்திரிகள் இவ்வழிப்பாட்டில் கலந்துகொண்டனர்.

நமது வளாகத்திலுள்ளோர் அனைவரையும் அனைத்து விலங்கினங்கள் ஜீவராசிகளையும் காத்து ரட்சிக்கும் ஸ்ரீ அமர் விநாயகர் கோவிலில் வருஷாபிஷேகம் - 26-01-2019 அன்று சிறப்பாக நடைபெற்றது.

புஷ்கரம் என்பது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை புனித நதிகளில் நடைபெறும் கும்பமேளா. ‘மஹாபுஷ்கரம்’ என்பது 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பமேளா ஆகும். தாமிரபரணி புஷ்கரணி வைபவத்தில் நமது காஞ்சி பிளாக் பயனாளிகள் மற்றும் விடுதி குழந்தைகள், இளைஞர்கள், யுவதிகள் ஆகியோர் 17, 18 மற்றும் 19 அக்டோபர் 2018 கல்லிடைக்குறிச்சி நதியில் புனித நீராடினார்கள்.

நடிகரும்,டைரக்டருமான திரு.சசிகுமார் அவர்கள் சக அன்பர்களுடன் 14-01-2019 அன்று சங்கத்திற்கு வருகைபுரிந்தர்

முன்னாள் இந்தியன் வங்கி சேர்மன் திரு.M.கோபாலகிருஷ்ணன் தனது மாப்பிள்ளை சென்னை அடையார் பேக்கரி உரிமையாளர் திரு.R.ராமேஷ், திருமதி.R.ஷகிலா ஆகியோருடன் 8-11-2018 அன்று சங்கத்திற்கு வருகைபுரிந்தர்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற கூற்றிற்கிணங்க நமது செயலர் திரு.S.சங்கரராமன் மற்றும் அவரது குழுவினரும் துபாய், அபுதாபி போன்ற நாடுகளுக்கு 2018 மார்ச் மாதம் ஒருவாரப்பயணமாகச் சென்றுவந்ததை தொடர்ந்து நமது EI Projetct திரு.சங்கர் சகாயராஜ் மற்றும் திரு.அரவிந்த் பரத்வாஜ் ஆகியோர் பிரேசில், துபாய் போன்ற நாடுகளுக்கு 2019 மார்ச், ஏப்ரல் மாதத்தில் சென்று நமது EI Project பற்றி Paper Presentation செய்து வந்தது பாராட்டுக்குரியது.

நமது Chief Physiotherapist திரு.P.ராமசுப்பிரமணியன் அக்டோபர் மற்றும் நவம்பர் 2018-ல் கனடா தேசத்தில் சில மருத்துவமனைகளில் பயிற்சி எடுத்துக்கொண்டார்

மேலும் கனடா தேசத்தின் Univresity of British Columbia in Vancouver-ல் நமது சங்கத்தின் செயல்பாடுகளை பற்றி 29-11-2018-ல் Presentation செய்தார் என்ற நல்ல செய்தியினையும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

Dr..தினேஷ் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நெதர்லாந்து, நியூயார்க் நகரங்களில் 2019 செப்டம்பர் மாதத்திலும், துபாய் நாட்டிற்கு திருமதி.ஆயிஷா, திரு.அரவிந்த், திரு.ராஜேஸ்வரன், திருமதி.கல்யாணி 2019 அக்டோபர் மாதத்திலும், வியன்னா நாட்டிற்கு திரு.தினேஷ் கிருஷ்ணமூர்த்தி, திரு.ராஜேஸ்வரன், திருமதி.கல்யாணி 2020 பிப்ரவரி மாதத்திலும் சென்று நமது EI Project பற்றி Paper Presentation செய்யவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச மாநாடு சென்னையில் வைத்து 13, 14 மற்றும் 15 பிப்ரவரி 2020-ல் நடைபெறவுள்ளது. UNICEF (United Nations International Children's Emergency Fund) மற்றும் Govt.of India-உடன் இணைந்து நமது EI Project சம்பந்தமான இம்மாநாட்டினை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக செயலர் திரு.எஸ்.சங்கரராமன் சென்னை திரு.D.ராமசந்திரன அறிமுகத்துடன் டெல்லியில் Dr.K.P.கிருஷ்ணன் IAS, செயலாளர், திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம், புதுடில்லி, Ms.நிலம் சௌனி IAS, செயலாளர், இந்திய அரசாங்கம், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை, புதுடில்லி, திரு.N.ராமேஷ்பாபு, பயிற்சி துணை இயக்குநர் மற்றும் பணியாளர் அதிகாரி செயலாளருக்கு, திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம், புதுடில்லி, திரு.பினய் குமார், செயலாளர், எ.ஃகு அமைச்சகம், புதுடில்லி, திரு.N.சிவசைலம் IAS, சிறப்பு செயலாளர் (Logistics) வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், புதுடில்லி, திரு.S.கிருஷ்ணன் IAS, முதன்மை செயலாளர், நிதி அமைச்சகம், தலைமை செயலகம், சென்னை, ஆகியோரை சந்தித்து உரையாடியுள்ளார்.

21-7-2019 அன்று தமிழக துணை முதல்வர் மாண்புமிகு திரு.O.பன்னீர்செல்வம், திரு.N.வாகுல், திரு.GK.விஸ்வநாதன் MRL Retd. குடும்பத்தினர் ஆகியோரையும் 24-7-2019 அன்று சமூக நலத்துறை அமைச்சர், மறுவாழ்வு செயலர் மற்றும் மாற்றுத்திறன் படைத்தோருக்கான ஆணையர், ஆகியோரை அடியேனும், செயலர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்களும் நமது EI Project Scale up செய்வது சம்பந்தமாக சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

"Solve MIT" என்ற Online Competition Award போட்டியின் இறுதிசுற்று நியூயார்க்கில் 24 செப்டம்பர் 2019-ல் நடைபெறவுள்ளது. இவற்றில் திரு.தினேஷ் கிருஷ்ணமூர்த்தி, திருமதி.சுலோசனா கிருஷ்ணமூர்த்தி, GCC, CEO Ms.Dominic ஆகியோர் கலந்துகொண்டு EI Project பற்றி Presentation செய்யவுள்ளனர்.

22-9-2018, 03-02-2019 மற்றும் 23-6-2019 ஆகிய தேதிகளில் நமது EI குழந்தைகளின் பெற்றோருக்கான பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதில் 345 குழந்தைகளும் அவர்களின் பெற்றோரும் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர்.

சுமார் ரூ.10 இலட்சம் செலவில் 400 சதுரடி பரப்பளவில் AKA.அப்துல் சமீது Ex.M.P அவர்கள் நினைவாகக் கட்டப்பட்டு அலுவலகக் கட்டட விரிவாக்கத்தின் திறப்பு விழா 16-09-2018 அன்று நடைபெற்றது. பேராசிரியர் K.M.காதர்மொகைதீன் Ex.M.P, தேசியத்தலைவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் திறந்து வைத்தார். தலைமை

விருந்தினராக திரு.K.A.M.முஹம்மது அபூபக்கர் M.L.A. கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி மற்றும் மாநிலப் பொதுச்செயலாளர், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக், மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

23-3-2019 அன்று காலிப்பர் பிரிவு, Water Recycling Plant and Bio Gas, சாரதி சதன் (ஓட்டுநர்கள் ஓய்வறை) ஆகியவற்றின் திறப்பு விழா நிழ்ச்சிகளும், மாற்றுத்திறன் படைத்த இளைஞர்கள் தங்குவதற்கு container விடுதி மற்றும் மருத்துவ சோதனை மையத்தின் (MTU) விரிவாக்க கட்டடித்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவும் நடைபெற்றது. இந்த விழாவில் NALCO's Company Secretary and Independent Directors Shri Nayan Mohanty, Prof. Damodar Acharya, Shri Nagendra Nath Sharma, Shri Pravat Keshari Nayak, Shri Dipankar Mahanta, சென்னை திரு.S.சங்கர நாராயணன், Head-IT India, லாஜிக்ஸ் ஹெல்த் இந்தியா பிரைவேட் லிமிட்., கோவை ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தார்கள். Boys Hostel Container Houses-க்கு சென்னை Entrust Software and Services Pvt. Ltd., நிறுவனம் Rs.21 lakshs நிதியுதவி அளித்துள்ளது.

Girls Hostel விரிவாக்கத்திற்கான Container Houses திறப்பு விழா 15-4-2019 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக திரு.R.அரசு இளங்கோ, துணைத் தலைவர், டெக்னாலஜி, லாஜிக்ஸ் ஹெல்த் இந்தியா பிரைவேட் லிமிட்., அமெரிக்கா பிரதிநிதி, திரு.M.முரளி மோகன், Country Head லாஜிக்ஸ் ஹெல்த் இந்தியா பிரைவேட் லிமிட்., சென்னை திரு.S.சங்கர நாராயணன், Head-IT India, லாஜிக்ஸ் ஹெல்த் இந்தியா பிரைவேட் லிமிட்., கோவை ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பெங்களூர் லாஜிக்ஸ் ஹெல்த் இந்தியா பிரைவேட் லிமிட் கம்பெனி இவற்றிற்கு Rs.22 lakhs நிதியுதவி செய்துள்ளது.

நமது சிவசரஸ்வதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளியின் புதிய வகுப்பறை Phase III and IV திறப்பு விழா 22-08-2019 அன்று ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா, துணை மேலாளர் திரு.எஸ்.ராமகிருஷ்ணன் தலைமையில் நடந்தது. புதிய கட்டடத்தை கார்ப்பரேட் சோஷியல்ரெஸ்பான்சிபிலிட்டி முதுநிலை மேலாளர் Dr..பிரகாஷ்குமார்மூட்பிட்ரி திறந்து வைத்தார். இவ்விழாவில் அமர் சேவா சங்க செயலர் திரு.S.சங்கரராமன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். அமர் சேவா சங்கத்தின் தலைவர் திரு.S.ராமகிருஷ்ணன், சிவசரஸ்வதி வித்யாலயா கல்விக்கமிட்டி துணைத்தலைவர், திரு.S.ராமன், பாரத் கல்விக்குழுமச் செயலர் திருமதி.காந்திமதி மோகனகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக திரு.G.ஜோதிராம், C.R.Narayana Rao அசோசியேட், ஆர்கிடெக்சர் கலந்து கொண்டார். அமர் சேவா சங்கத்தின் துணைத்தலைவர், Dr.K.முருகையா, நிர்வாக கமிட்டி உறுப்பினர் திரு.T.V.சுப்பிரமணியன், Dr.S.திருவன், தாளாளர், ஸ்பெக்ட்ரம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கதிர்காந்தம், கோவில்பட்டி அன்பர்கள் திரு.S.வெங்கடேஷ்வரன், நியூ பாம்பே ஸ்வீட்ஸ், திரு.R.சுப்புராஜ், ஆஸ்கார் கேட்ரிங், திரு.ராமமூர்த்தி ஆடிட்டர், தொழில் அதிபர் V.சுப்பிரமணி, மணிபைபர் ஆய்க்குடி. திருமதி.R.ராஜேஸ்வரி சீனியர் அசோசியட், ஸோகோ, தென்காசி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

Foster parent care centre புதிய கட்டடத்திற்கு பூமி பூஜை விழா 26-01-2019 அன்று சிறப்பான முறையில் நடைபெற்று கட்டட வேலை Ramco Smart Build நிறுவனத்தாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருவள்ளுர், D.R.Enterprise Automative Pvt.Ltd., நிறுவனம் Rs.30 Lakhs நிதியுதவி அளித்துள்ளது.

RPSNC Boys and Girls குழந்தைகளுக்கு என்று தனிதனியாக toilet வசதி அமைத்திட பூமி பூஜை 17-6-2019 அன்று நடைபெற்றது. சங்கத்தின் கமிட்டி உறுப்பினர் திருமதி.எஸ்.பட்டம்மாள் கலந்துகொண்டார். RPSNC சீரமைப்பு பணிக்காக நாசிக், Ring Plus Acqua Ltd., நிறுவனம் Rs.15 lakhs நிதியுதவி அளித்துள்ளது.

நமது மருத்துவ பரிசோதனை மையத்தின் விரிவாக்க கட்டடத்திற்கான பூமி பூஜை 23-08-2019 அன்று நடைபெற்றது. இக்கட்டடத்திற்கு சென்னை G.R.தங்கமாளிகை நிறுவனம் Rs.1 கோடி நிதியுதவியும், சென்னை, ஸ்டார் ஹெல்த் இன்ஸுரனஸ் நிறுவனம் Rs.5 Lakshs நிதியுதவியும், மதுரை, ஆரோ லேப் டிரஸ்ட் Rs.10 lakhs நிதியுதவியும் வழங்க முன்வந்துள்ளது குறிப்பிடதக்கது. தலைமை விருந்தினராக திரு.N.சுந்தர், அம்மா உணவகம், குற்றாலம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். நமது கமிட்டி உறுப்பினர் திருT.V.சுப்ரமணியன் மற்றும் நமது ஆலோசகர் சென்னை திரு.P.தியாகராஜன் ஆகியோரும் பங்கேற்றனர்.

சிறுமி அனிதாவின் தந்தை முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவர். அவருடைய தயாரும் மனநலம் பாதிக்கப்பட்டவர். நாம் ஒருவர் நிகழ்ச்சி மூலம் அவருடைய மறுவாழ்வு மற்றும் சிகிச்சைக்காக ஒரு நிதிதிரட்டும் நிகழ்ச்சியாக சன் தொலைக்காட்சி நிறுவனம் இந்நிகழ்ச்சியை நடிகர்.திரு.விஷால் மற்றும் நகைச்சுவை நடிகர் திரு.சூரி ஆகியோரை வைத்து 21 அக்டோபர் 2018 நடத்தினார்கள். அமர் சேவா சங்கம் மறுவாழ்வு கொடுக்கும் ஒரு மையமாக இந்நிகழ்ச்சி மூலம் உலகுக்கு காட்டப்பட்டது. மேலும் மதுரை, K.S.மருத்துவமனையில் அட்மிட் செய்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி மூலம் கிடைத்த Rs.1 lakh அவருடைய சிகிச்சைக்காக பயன்படுத்தப்பட்டது.

கனடா, HCI நிறுவனம் The Grand Gala Dinner நிதிதிரட்டும் நிகழ்ச்சி 3-11-2018 நடத்தியது. இவற்றில் 600 நபர்கள் கலந்துகொண்டார்கள். தலைமை விருந்தினராக GCC, CEO Ms.Dominic கலந்துகொண்டார். நமது Chief Physiotherapist திரு.P.ராமசுப்ரமணியன் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றார்.

நாடகம், வீடியோ, இசை, நடனம் இணைந்த தமிழ் காவியம் “பாரதி யார்”. சங்கத்திற்கு நிதிதிரட்டும் நிகழ்ச்சியாக இந்நாடகம் குற்றாலம் கலைவாணர் அரங்கில் 17-11-2018 அன்று நடைபெற்றது. இயக்குநர் திரு.B.ராமன் அவர்கள் இந்நிகழ்ச்சியை நடத்திக் கொடுத்தார். இந்நிகழ்ச்சி மூலம் Rs.4.31 lakhs நிதி திரட்டப்பட்டது. இந்த நாடகத்தை நமது சங்கத்தின் குடும்பத்தினரும் மற்றும் வெளி நபர்களும் சிறப்பான முறையில் கண்டுகளித்து மகிழ்ந்தனர். இவற்றிற்கு Rs.2 lakhs நிதியுதவி வழங்கிய திரு.R.P.கிருஷ்ணமாச்சாரி மற்றும் Sponsor வழங்கிய நல்ல உள்ளங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

செயலாளர் திரு.S.சங்கரராமன் அவர்களின் திறமை, அனுபவம், அர்ப்பணிப்பு, சுறுசுறுப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு காந்தி கிராமப் பல்கலைக்கழகத்தில்

Senate உறுப்பினராகவும், காந்தி கிராம் அறக்கட்டளையின் பொருளாளராகவும், சாந்தி காது கேளாதோர் பள்ளி, ஔவை ஆசிரமத்தின் தாளாளராகவும், பெங்களுரு CBR Forum அமைப்பின் Vice President ஆகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளது அனைவரும் அறிந்ததே. 17-11-2015-ஆம் தேதியிலிருந்து மத்திய அரசு பரிந்துரையின் பேரில் National Aluminium Company, Bhuvaneshwar, Orissa–வின் Independent Director-ஆகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளது அவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும், சங்கத்திற்கும் மேலும் பெருமை சேர்க்கும் இனிய நிகழ்வு. எல்லாம் அவன் சித்தம். தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாரியத்திலும் (Welfare Board) உயர்மட்டக் குழுவிலும் (High Level Committee) திரு.S.சங்கரராமனும் நிபுணர் குழுவில் (Expert Committee) திரு.S.ராமகிருஷ்ணனும் உறுப்பினர்களாக செயல்பட்டு வருகிறார்கள். செயலாளர் திரு.S.சங்கரராமன் மற்றும் அவரது துணைவியார் திருமதி.ரமணி சங்கரராமன் இருவரும் தொடர்ந்து 15 ஆண்டுகளாக மும்பை மாரத்தான் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சாதனை படைத்து வருவது நாம் அனைவரும் அறிந்ததே.

6-1-2019 அன்று சென்னையில் நடைபெற்ற சென்னை மாரத்தான் போட்டியிலும், 19-5-2019 அன்று பெங்களூரில் நடைபெற்ற பெங்களூர் மாரத்தான் நிகழ்ச்சியிலும் நமது செயலர் மற்றும் குழுவினர் பங்கேற்று சங்கத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். வருடந்தோறும் இம்மூன்று மாரத்தான் போட்டிகளிலும் நமது செயலரும், நமது குழுவினரும் ஆங்காங்குள்ள தன்னார்வத் தொண்டர்களும், உறுப்பினர்களும் கலந்து கொண்டு சாதனை படைத்து வருகிறார்கள். செயலருக்கும், துணைவியாருக்கும் நமது குழுவினருக்கும், மற்ற அன்பர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் உரித்தாக்குவோமாக.

ISO- Internal and External Audit நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் மே மாதத்தில் நடைபெற்ற BSI Enternal Audit-ல் நமக்கு 24-07-2022 வரை Certificate Registeration செய்து கொடுத்துள்ளது.

தமிழக அரசின் சார்பில் உலக மாற்றுத் திறனாளிகள் தினவிழா சென்னையில் வைத்து 03-12-2018 அன்று நடைபெற்றது. அடியேனும். செயலர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்துறை ஆணையர், செயலர் மற்றும் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து உரையாடும் வாய்ப்பினைப் பெற்றோம்.

அமர் சேவா சங்கத்தின் சார்பில் உலக மாற்றுத் திறனாளிகள் தினவிழா இந்த வருடம் அம்பாசமுத்திரம் அ.வே.ராம.வே அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 28-12-2018 அன்று சிறப்பாக நடைபெற்றது. நமது மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ் I.A.S. தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக திருமதி.B.மகேஸ்வரி I.A.S. மாநில மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் கலந்துகொண்டார். அம்பாசமுத்திரம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு.M.ஜாகீர் ஹுசேன், ஒமேகா சிப்ஸ், நிர்வாக மேலாளர் திரு.V.பாலசுப்ரமணியன், அ.வே.ராம.வே.அரசு மேல்நிலைப்பள்ளி, தலைமை ஆசிரியை திருமதி.க.மேரி மார்க்கரேட் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டனர்

பட்டுகோட்டையில் சங்கத்தின் well wisher திரு.M.S.ராஜேந்திரன் மிராசு 2 Ground (சுமார் 11 செண்ட்) காலிமனையை சங்கத்திற்கு நன்கொடையாக 04.07.2018 அன்று வழங்கியுள்ளார். விரைவில் நமது VBRI EI பணிகள் அப்பகுதியில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

Wheel Chair Basket Ball Court நமது சங்க வளாகத்தில் அமைக்கப்படவுள்ளது. அதற்காக USA, Ms..பிரபா சாரங்கி என்ற நன்கொடையாளர் Rs.30 lakhs நிதியுதவி அளித்துள்ளார்.

ராஜபாளையம், ராம்கோ சிமிண்ட நிறுவனம் நம்முடைய கட்டட வேலைக்காக 7000 மூடை சிமிண்ட் நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது. இதுவரை பள்ளி கட்டுமான பணிக்கு (Phase 3 & 4) முதல்கட்டமாக 2500 Bag வழங்கியுள்ளது.

Seshashayee Paper நிறுவனம் வருடந்தோறும் 20 டன் பேப்பர் நன்கொடையாக வழங்கி வருகிறது.

நெல்லை அரவிந்த் கண் மருத்துவமனை மற்றும் குழுவினர் மற்றும் சென்னை Dr.மாலதி ரமணி, Dr.தமிழ்செல்வி மருத்துவ முகாம்களை நடத்தி உதவினார்கள்.

Dr.முகுல் அவர்களின் தலைமையில் 14 Staff அரவிந்த் கண் மருத்துவமனை & அமர் சேவா சங்கம் இணைந்து நடத்திய இலவச கண் மருத்துவ முகாமில் பங்கேற்றன.

சாம்பவர்வடகரை பேரூராட்சிக்கு உட்பட்ட கம்பிளி-விந்தன்கோட்டை ரோடு, இண்ராயல் கம்பெனி அருகில் புன்செய் நிலம் பம்புசெட், கிணறுடன் கூடிய சுமார் 16.25 ஏக்கர் நிலம் சங்கத்தின் விரிவாக்க திட்டங்களுக்காக வாங்கப்பட்டுள்ளது. இவற்றின் மதிப்பு Rs.1 கோடி 78 Lakhs ஆகும். தற்சமயம் சொட்டுநீர் பாசனம் மூலம் நெல்லி தோப்பு பராமரிக்கப்பட்டு வருகிறது. கமிட்டி உறுப்பினர் திரு.T.V.சுப்ரமணியன் அவர்களும் செயலர் திரு.எஸ்.சங்கராமன் அவர்களும் இதில் முழுகவனம் செலுத்தி வருகிறார்கள்.

சுலோசனா கார்டன்ஸ் வளாகம், விந்தன்கோட்டை வளாகம் மற்றும் கொடிக்குறிச்சி வளாகத்தில் வருகிற 10 ஆண்டுகளில் கட்டப்பட வேண்டிய பல்வேறு கட்டடங்கள் குறித்த Master Plan மற்றும் Project Proposal தயார் செய்வதற்கு நமது நலம்விரும்பி திரு.K.ராமலிங்கம் சென்னை அவர்கள் அறிமுகத்தின்பேரில் M/s.C.R.Narayana Rao (Consultants) Pvt.Ltd., Mylapore, Chennai நிறுவனத்தை அனுகி நான்கு சுற்று கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 31-3-2020-க்குள்ளாவது Master Plan தயாரிப்புப் பணி நிறைவடைய வேண்டும்.

## விருதுகள்

செயலாளர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்களுக்கு "Vocational Excellency" என்ற விருது 19-1-2019 அன்று Rotary club of Navi, Mumbai Sunrise வழங்கியது.

செயலாளர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்களுக்கு "Fund Raiser Legend" என்ற விருதை Tata Mumbai Marathon 30-04-2019 அன்று மகாராஷ்டிரா கவர்னர் மாண்புமிகு.திரு.வித்யாசாகர் ராவ் என்பவரால் வழங்கப்பட்டது.

அன்னையர் தினத்தன்று அன்னையரை கௌரவிக்கும் விதமாக நமது பள்ளி நூலகர் திருமதி.சிதம்பர கோமதி அவர்களுக்கு சென்னை ஸ்ரீ அருணோதயம் டிரஸ்ட் என்ற நிறுவனம் Special Mom என்ற விருதை 12 மே 2019 அன்று வழங்கி கௌரவித்தது

பெங்களூர் TCS நிறுவனம், "Highest iCar Fund Raiser" என்ற விருதை 04-06-2019 அன்று செயலாளர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்களுக்கு வழங்கி கௌரவித்தது.

தலைவர் திரு.எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு 'சிறந்த பண்பாளர்' என்ற விருது 14-07-2019 அன்று Rotary Club of Madurai East வழங்கி கௌரவித்தது.

"பொற்றாமரை' கலை-இலக்கிய அரங்கத்தின் 15-ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு தலைவர் திரு.எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு 21-7-2019 அன்று "பொற்றாமரை விருது" தமிழக பாரதிய ஜனதா கட்சி தலைவர் இல.கணேசன் வழங்கி கௌரவித்தார்.

சத்யா சிறப்புப் பள்ளி, NIPMED-யும் இணைந்து நடத்திய Conference-ல் 'Reflection on Success and Barrier in Implementing Inclusive Education for Children with Special Need' என்ற தலைப்பின் கீழ் செயலர் அவர்கள் பாண்டிச்சேரி பல்கலைகழகத்தில் வைத்து 28-30 மார்ச் 2019 Key Note Presentation செய்தார்.

2019 ஏப்ரலில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் செயலர் அவர்களை இந்திய தேர்தல் ஆணையம் 'State Icon'-ஆக தேர்ந்தெடுத்தது. மேலும் இந்திய தேர்தல் ஆணையர் திரு.அசோக் லாவாசா மற்றும் தமிழக தேர்தல் ஆணையர் திரு.சுனில் சந்திரா அவர்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தின் கீழ் நடைபெற்ற பாராளுமன்ற தொகுதிகளின் பூத்தில் மாற்றுத்திறனாளிகள் சென்று ஓட்டு போடுவதற்கு தகுந்த வசதிகள் ஏற்படுத்துதல், மாற்றுத்திறனாளிகளின் ஒட்டுரிமையைப் பற்றி விழிப்புணர்வு பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது.

2020 ஜுன் மாதம் அமர் சேவா சங்கம் 40-வது ஆண்டு ஆரம்பத்தில் அடியெடுத்து வைக்கிறது. 2021 ஜுன் மாதம் 40-வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் வண்ணம் சிறப்பு மலர் வெளியிடலாம். 2020 செப்டம்பர் மாத நடைபெறவுள்ள பொதுக்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அடுத்த தலைமுறையினர் சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகைகளும், ஆலோசனைகளும், அறிவுரைகளும் செய்யப்படவேண்டும். Early Intervention-ல் (0-6 வயது வரம்பு) ஆரம்பித்து பள்ளி பருவம், கல்லூரி பருவம், வருவாய் ஈட்டும் மற்றும் குடும்பத்தை நிர்வகிக்கும் பருவம், முதுமை பருவம் என மாற்றுத் திறனாளிகளின் நலனில் எவ்வாறு அக்கறை செலுத்த வேண்டும், இதில் அமர் சேவா சங்கத்தின் பங்கு என்ன? மாநில, மத்திய அரசின் பங்கு என்ன? மாவட்ட நிர்வாகம் மற்றும் பஞ்சாயத்துகளின் பங்கு என்ன? பொது மக்கள், வேலை வாய்ப்பு அளிக்கும் நிறுவனங்கள், கல்வி மற்றும் போக்குவரத்து நிறுவனங்கள் போன்ற அமைப்புகளின் பங்கு என்ன? என்பனபற்றியெல்லாம் கருத்துகணிப்பு நடத்தப்படவேண்டும்.

**<u>இரங்கல் செய்தி</u>**

சங்கமம் பள்ளியில் பணிபுரியும் திருமதி.எஸ்.ஜெனிபா (Teaching Asst.)அவர்களின் தந்தை 18-11-2018 அன்றும் பத்ம ஸ்ரீ ஐராவதம் மகாதேவன் (IAS) அவர்கள் 26-11-2018 அன்றும் TSR வெங்கட்ரமணா அவர்களின் மூத்த சகோதரர் TSR

பாலகிருஷ்ணன் 28-11-2018 அன்றும் மற்றொரு சகோதரர் TSR மணி 24-12-2018 அன்றும் சங்கத்தின் முன்னாள் பணியாளாரும் தற்போது கிளினராக பணிபுரிந்து வருகிற திரு.மாரியப்பன் அவரின் தந்தையுமான திரு.மாடசாமி 12-12-2018 அன்றும் திருமதி.மாலாராஜன் அவர்களின் கணவர் திரு.ராஜா அவர்கள் 20-12-2018 அன்றும் ஆய்க்குடி திருவள்ளுவர் கழக முன்னாள் செயலாளர் திரு.முத்துசாமி 31-12-2018 அன்றும் மக்கள் மருத்துவர் திரு.ஜெயச்சந்திரன் 31-12-2018 அன்றும் திரு.கஸ்துாரிரங்கன் அவர்களின் துணைவியாரின் தாயார் திருமதி.ஜெயலெஷ்மி கோபாலன் 25-12-2018 அன்றும் சிவஸ்ரீ வித்யா சங்கர சிவச்சார்யார் 03-01-2019 அன்றும் PRO திரு.கல்யாணம் அவரின் தந்தையார் திரு.விஸ்வநாதன் 13-01-2019 அன்றும் திரு.கோகுல் அவர்களின் தந்தை திரு.சுந்தரம் அவர்கள் 24-01-2019 அன்றும் திரு.சுப்புராஜ். இசக்கிமுத்து இவர்களின் தாயார் 28-01-2019 அன்றும் திரு.S.V.மோனி 24-01-2019 அன்றும் திருமதி.இளம்பிறை அவர்களின் கணவர் திரு.மணிமாறன் 26-01-2019 அன்றும் திரு.நாராயணன் (State Bank of Thiruvangur) செங்கோட்டை 29-01-2019 அன்றும் இரண்டு விருந்தினர் மாளிகை கட்டடம் கட்டி கொடுத்த கொடைவள்ளல் திரு.K.ராமசாமி, சேர்மன், KR பாலிடெக்னிக் மற்றும் கல்வி குழுமம், ராஜபாளையம் 12-03-2019 அன்றும் சென்னை ஐயப்பா குழு குருசாமி பெரியவர் திரு.கிருஷ்ணன் 15-03-2019 அன்றும் டிரைவர் மாரி சகோதரி திருமதி.பேச்சியம்மாள் 16-04-2019 அன்றும் துாத்துக்குடி திரு.சுப்பையா 28-04-2019 அன்றும் வலாஜாப்பேட்டை திரு.சங்கர் 29-04-2019 அன்றும் RPSNC பிரிவில் பணிபுரியும் திருமதி.பணிகொழுந்து திரேஸ் அவர்களின் கணவர் 08-05-2019 அன்றும் நடிகரும், டைரக்டருமான திரு.கிரேஸிமோகன் 10-6-2019 அன்றும் சென்னை திரு.V.R..லெட்சுமி நாராயணன் 23-06-2019 அன்றும் சென்னை திரு.G.K..ராமகிருஷ்ணன் 23-07-2019 அன்றும் திருமதி.நிர்மலா (House Mother) இவர்களின் தாயார் திருமதி.சரோஜினியம்மாள் 15-08-2019 அன்றும் நமது Finance கமிட்டி உறுப்பினரான விசாகப்பட்டிணம் Modern Refractory Erectors திரு.P.K.A.நாராயன் அவர்களின் துணைவியார் திருமதி.புவனா பாலக்காடு நெல்லைப்பள்ளி கிராமத்தில் வைத்து 25-08-2019 அன்றும் ஆய்க்குடி திருவள்ளுவர் கழக கவுரவ ஆலோசகரும், ஓய்வுப் பெற்ற தமிழாசிரியருமான திரு.C.சுப்பையா 21-08-2019 அன்றும் VBRI (EI) பிரிவு பணியாளர் திரு.K.K.கிருஷ்ணன் அவர்களின் தந்தையார் திரு.கடற்கரை 28-08-2019 அன்றும் இறைவனது திருவடி சேர்ந்தார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகக் குழு, பொதுக்குழு மற்றும் அறிவுரைக்குழு உறுப்பினர்கள் சங்கத்திற்கு முழு ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள். கடந்த 38 ஆண்டுகளில் சங்கத்தில் நடைபெற்ற நல்ல காரியங்களுக்கான பெருமை முன்னாள் மற்றும் தற்போதுள்ள 29 அன்பர்களைக் கொண்டஅறிவுரைக்குழு, 26 பேரைக் கொண்ட பொதுக்குழு, 11 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு, அயராது அல்லும் பகலும் பணிபுரிந்த, பணிபுரிந்து வருகின்ற அன்பர்களையும், தன்னார்வத் தொண்டர்களையும், அறிவுரை, ஆலோசனைகள் வழங்கி நம்மோடு இணைந்து செயல்பட்டு வரும் நிறுவனங்களையும், நலம்விரும்பிகளையும், நன்கொடையாளர்களையும், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி அன்பர்களையுமே சாரும். எல்லாவற்றிற்கும் மேலாக பகவானுடைய பரிபூரண அனுக்ரஹம் நமக்கு எப்பொழுதும் இருந்து வருகிறது.

நமது செயல்பாடுகள் சங்கத்திற்கு விஜயம் செய்யும் பல நல்ல உள்ளங்களாலும், நமது website-ஐ பார்வையிடும் சகோதர, சகோதரிகளாலும், பத்திரிகைகள், தொலைகாட்சிகள் போன்றவற்றில் நமது நிகழ்வுகளைக் காணும் அன்பர்களாலும் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது. செயலா், CSR Cell மக்கள் தொடர்பு பிரிவு மற்றும்

The Amar Foundation நமது சங்கத்தின் நிதிநிலையை உயர்த்துவதில் காட்டும் விடாமுயற்சி, மேற்கொள்ளும் பல்வேறு திட்டங்கள் பல சமூக சேவை நிறுவனங்களுக்கும் வழிகாட்டியாக அமைகிறது.

பல நல்லிதயம் கொண்ட பெரியோர்களின் ஆசிகளாலும், ஆதரவினாலும், பல உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், தொழிலதிபர்கள், தனிநபர்கள் நன்கொடையாலும், உறுப்பினர்கள், பணியாளர்களின் இடைவிடாத உழைப்பினாலும் சங்கம் மேலும் பல சாதனைகளைப் படைக்கவும், சவால்விடப்பட்ட சகோதர, சகோதரிகளின் வாழ்க்கைத்தரம் மேம்படவும், சங்கப்பணியாளர்கள், நமது சேவையைப் பயன்படுத்திக் கொள்வோர், தன்னார்வத் தொண்டர்கள், உறுப்பினர்கள், நன்கொடையாளர்கள், நன்கொடை திரட்டி உதவுபவர்கள், இப்பகுதிவாழ் பொதுமக்கள் மற்றும் அனைவரும் தேக ஆரோக்கியத்தோடு, வளமான வாழ்வு பெறவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி பிரார்த்தித்துக் கொள்கிறோம். நமக்கெல்லாம் நல்லெண்ணங்களையும், தொலைநோக்குப் பார்வையினையும், திறமையினையும், குறிப்பாக தொண்டுள்ளத்தையும் மேன்மேலும் வழங்கி **Live To Serve** என்ற நமது வாசகத்தை, கொள்கையை அர்த்தமுள்ளதாக்க ஆண்டவன் என்றும் அருள்பாலிப்பாராக!!

நன்றி.

என்றும் இறைபணியில்,

எஸ்.ராமகிருஷ்ணன்
தலைவர்.

இடம்: ஆய்க்குடி.
நாள்: 30-08-2019